# வகுப்பு 8

## தமிழ்

கால அளவு: 1.30 மணிநேரம் மதிப்பெண்கள்: 50

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **5×1=5**

1) தமிழ்த்தாய் ஐம்பெருங்காப்பியங்களை ............ அணிந்துள்ளாள்

அ) மாலையாக ஆ) ஆடையாக இ) அணிகலன்களாக ஈ) மகுடமாக

2) வளைந்த கோடுகளால் அமைந்த மிகப் பழமையான தமிழ் எழுத்து ............. என அழைக்கப்படுகிறது

அ) கோட்டெழுத்து ஆ) வட்டெழுத்து இ) சித்திர எழுத்து ஈ) ஓவிய எழுத்து

3) மலர்களிலிருந்து வரும் ............. வண்டுகளை ஈர்க்கும்

அ) மந்தம் ஆ) அந்தம் இ) சந்தம் ஈ) கந்தம்

4) நோய்கள் பெருக மனிதன் ........... விட்டு விலகியது தான் முதன்மைக் காரணமாகும்

அ) வீட்டை ஆ) உணவை இ) நாட்டை ஈ) இயற்கையை

5) அங்கண் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ) அம் + கண் ஆ) அ + கண் இ) அங் + கண் ஈ) அங்கு + கண்

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக** **2×1=2**

6) கடைச்சங்க காலத்தில் எழுதப்பட்ட தமிழ் எழுத்துகள் ............. என அழைக்கப்பட்டன

7) மக்கள் வாழும் நிலப்பகுதியைக் குறிக்கும் சொல் ...............

**III. பொருத்துக** **3×1=3**

8) கீழ் உதடும் மேல்வாய்ப்பல்லும் இணைவதால் பிறக்கும் எழுத்து - ட், ண்

9) நாவின் நுனி அண்ணத்தின் நுனியைப் பொருந்துவதால் பிறக்கும் எழுத்துகள் - உ, ஊ

10) உதடுகளைக் குவிப்பதால் பிறக்கும் எழுத்துகள் - வ்

**IV. எவையேனும் ஆறு வினாக்களுக்கு மட்டும் விடையளி** **6×2=12**

11) மயங்கொலி எழுத்துகள் யாவை?

12) பழியின்றி வாழும் வழியாகத் திருக்குறள் கூறுவது யாது?

13) பட்ட மரம் எதனை நினைத்துக் கவலை அடைந்தது?

14) இயற்கை போற்றத்தக்கது ஏன்?

15) வீரமாமுனிவர் மேற்கொண்ட எழுத்துச் சீர்திருத்தங்களில் எவையேனும் இரண்டனை எழுதுக

16) தமிழ் எவற்றை அறிந்து வளர்கிறது?

17) இரட்டுற மொழிதல் அணி என்பது யாது?

18) தமிழர் மருந்துவத்தில் மருந்துகளாகப் பயன்படுவன யாவை?

**V. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி** **2×4=8**

19) தமிழையும் கடலையும் ஒப்பிட்டுத் தமிழழகனார் கூறுவன யாவை?

20) பள்ளிக் குழந்தைகளுக்கு மருந்துவர் கூறும் அறிவுரைகள் யாவை?

21) ஏட்டில் எழுதிய பழங்கதையாக முடிந்தவை எவை?

**VI. எவையேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விடையளி.** **1×5=5**

22) எழுத்துகளின் தோற்றம் குறித்து எழுதுக

23) விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற உங்கள் நண்பனுக்குப் பாராட்டுக் கடிதம் எழுதுக

**VII. அடிபிறழாமல் எழுதுக.** **1×3=3**

24) வாழ்க நிரந்தரம் - எனத் தொடங்கும் தமிழ்மொழி வாழ்த்து பாடலை எழுதுக

**VIII. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி.** **2×2=4**

25) **கலைச் சொல் எழுதுக**

அ) Pun - ஆ) Medicinal plant -

26) **வினைமுற்றுக்கு உரிய வேர்சொல்லை எழுதுக**

அ) தருகின்றனர் - ஆ) சென்றனர் -

27) **கோடிட்ட இடத்தை நிரப்புக.**

விலங்கொடு ............... அனையர் ..........

கற்றாரோடு ஏனை யவர்.

**IX. ஏதேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விடையளி.** **1×8=8**

28) 'எனது தாய்மொழி' கட்டுரையை எழுதுக

29) 'வெட்டுக்கிளியும் சருகுமானும் கதையைச் சுருக்கி எழுதுக.

- - - - - - -

EDUCATION IS THE CHIEF DEFENCE OF A NATION
BTC
BLESSING TUTION & TUTORIAL CENTRE
No.12, Ganesh Apartment, Medavakkam, Ayanavaram, Chennai-600023